[1984 பிப்ரவரி 16

சிறப்பு நிலை.

* 28. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன், திரு. ஜி. சுவாமிநாதன், திரு. பா. ரா. தாமஸ், அண்ட் திரு. க. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறோம்—

(அ) கல்வித் துறையால் 11—8—1981ல், வெளியிடப்பட்ட அரசாணை நிலை எண் 1759-ல் இடைநிலை ஆசிரியர்களுக்கும், அவர்களுக்கு இணை யான ஊதியம் பெறும் ஆசிரியர்களுக்கும் மட்டும் இருபது ஆண்டுப் பணிக் கால அடிப்படையில் சிறப்பு நிலை (Special Grade) வழங்கப்பட்டு, பட்டதாரி ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், உடற்கல்வி இயக்குநர்கள், தலைமை ஆசிரியர்கள், மேல்நிலைத் தொழிலாசிரியர்கள், முது கலைப் பட்டதாரி ஆசிரியர்கள், ஆகியோருக்கு இச்சலுகை வழங்கப்படாததால், சுமார் 50,000 ஆசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கும் இச் சலுகையினை நீட்டித்துத் தர அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, பத்தாண்டு பணிக்கால அடிப்படையிலே தேர்வு நிலை வழங்க வேண்டும் என்பதும், இருபது ஆண்டு பணிக்கால அடிப்படையிலே சிறப்பு நிலை வழங்க வேண்டும் என்பதும் ஆசிரியர்களின் நீண்டகால கோரிக்கையாகும். அதில் ஒன்றை அரசு நிறை வேற்றியிருக்கிறதென்றாலும், சிறப்பு நிலையைப் பொறுத்தவரையிலே, பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள், கைத்தொழில் ஆசிரியர்கள் முதலியவர்களுக்கு மட்டுமல்லாமல், தலைமையாசிரியர்களுக்கும் கூட இதுவரை சிறப்புநிலை வழங்கப்படவில்லை. ஆகவே ஒரு நிலைக்குத் தரப்பட்டிருப்பதை மற்ற நிலைக்கும் விரிவாக்குவதில் அரசுக்கு சிரமம் இருக் காது, அரசு இதைப் பரிவோடு பரிசீலிக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவரவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்விக்கு இப்போது பதில் தரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு தலைமையாசிரியரைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார். அதுபற்றி விவரம் இல்லை. தனியாகக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

REPORTING SECTION
(Council)

செல்வி ஆ. லீலாவதி : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கூறியதுபோல, செகண்டரிகிரேட் ஆசிரியர்களுக்கு மட்டும் 20 ஆண்டுகள் பணி செய்தால், ஸ்பெஷல் கிரேடு கொடுக்கப்படுகிறது. ஏனைய ஆசிரியர்களுக்கும், 20 ஆண்டுகள் பணி புரிந்த பிறகு, ஸ்பெஷல் கிரேடு கொடுக்காதது, ஒரு கண்ணிலே வெண்ணையும், இன்னொரு கண்ணிலே சுண்ணாம்பும் வைப்பது மாதிரி இருக்கிறது. ஆகையால் இவர்களுக்கும் ஸ்பெஷல் கிரேடு கொடுக்க அரசு முன்வரவேண்டும்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, 20 ஆண்டு பணிக்கால அடிப்படையில், ஹையர் கிரேடு ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள், அதே ஊதிய விகிதத்தில் உள்ள எல்லா ஆசிரியர்களும், மேலும் பட்டதாரி ஆசிரியர்களும், அவர்களது ஊதிய விகிதத்தில் உள்ள எல்லா ஆசிரியர்களும் சிறப்பு நிலை 1—6—1981, 1—4—1982 முதல் பெற வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. மற்றவர்களைப்பற்றி விவரமில்லை.

தலைஞாயிறிலிருந்து திருத்துறைப்பூண்டிக்குப் பேருந்து விடுதல்.

* 29. வினா—**திரு. க. மீனாட்சிசுந்தரம் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம் தலைஞாயிறிலிருந்து வாட்டாகுடி, உம்பளாச்சேரி வழியாக, திருத்துறைப்பூண்டிக்குப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவரவர்களே, இதிலே குறிப்பிடப்பட்டிருக்கின்ற ஊர்கள் மிகவும் குக்கிராமங்கள் ஆகும். போக்குவரத்துக்கு வசதி இல்லாமல் மக்கள் எல்லாம் அவதிப்படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். அதுவும் இந்த ஊர்களில் உள்ளவர்கள் பேருந்தையே பார்த்ததில்லை என்கிற நிலை இருக்கிறது. ஆகவே இப்போதில்லாவிட்டாலும், அமைச்சரவர்கள் மீண்டும் செயற்குறிப்பினைத் தயாரித்து, அதை வருங்காலத்தில் விரிவாகச் செயல்படுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி : தலைவரவர்களே, அந்தப் பகுதியில் இருக்கிற பாதைகள் இப்போது பேருந்துகள் போவதற்கு சாத்தியமாக இல்லை என்று குறிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இதில் முன்னேற்றம் ஏற்படுமானால், தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.